நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J. உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13ஆம் நாள்
2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

C.N.R.No.TNMY02-007143-2024

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 28/2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்
மயிலாடுதுறை காவல் நிலையம்
குற்ற எண். 502/2024 ..... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

ராஜேஷ், 39/2024
த/பெ. கேசவன்,
தெற்கு தெரு,
மூவலூர், மயிலாடுதுறை. ....... எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம் மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**

**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | - | - | 29.09.2024 Station Bail |
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 29.09.2024 | 09.01.2025 | |
| iii) | The date of questioning of the Accused U/s.263 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 | 04.06.2025 | | |
| iv) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS. | Crlmp No. | Date of filing | Result |
| | | - | - | - |
| | | - | - | - |

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.27 20:34:30 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 03.03.2026 | 03.03.2026 |
| | | PW2 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW3 | 25.03.2026 | 25.03.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351(1)(b) of BNSS. | 26.03.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 09.01.2025ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 26.03.2026ஆம் தேதி நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி P. மாலதி அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. பிரபு அவர்கள் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

(i) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :–

29.09.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக்கடை அருகில் எதிரி எந்தவித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் சுமார் 180 மி.லி பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் குற்ற செய்கையானது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Actன் படி நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSSன் படி அன்று இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:34:38 +0530

3) எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Actன் கீழ் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**ii) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு :-**</u>

5) 29.09.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக்கடை அருகில் எதிரி எந்தவித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் சுமார் 180 மி.லி பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1 திரு. மதன்குமார் தலைமை காவலர் மற்றும் அ.சா.2 திரு. அஜய் இரண்டாம் நிலை காவலர் ஆகியோர் சம்பவம் பற்றியும், வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 செல்வி. பிரியங்கா உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தது பற்றியும், எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார்கள்.

7) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 25.03.2026 அன்று முடித்து கொள்ளப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 3 சாட்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

8) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரியிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS-ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தனது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரி தரப்பு சாட்சியம் 26.03.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

9) அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4(1) (C) TNP Actன் கீழ் குற்றச்சாட்டை நிரூபிக்க சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மற்றும் சான்றாவணங்களை குறியீடு செய்யப்பட்டு மேற்படி வழக்கில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:34:44 +0530

10) மாறாக எதிரி தரப்போ, எதிரி மீது புள்ளிவிவர கணக்கிற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அ.சா.1 மது விலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்றார்கள் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் எதிரியை விசாரித்தது தொடர்பாகவும், பாண்டி சாராயம் கைப்பற்றப்பட்டது பற்றியும், முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததாலும், எதிரியிடமிருந்து பாண்டி சாராயத்தை கைப்பற்றியதற்கு முறையான ஆவணங்கள் ஏதும் இல்லாததாலும் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்படாததால் எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

<u>தீர்வுக்குரிய பிரச்சினை</u> :–

11) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான 4(1) (C) TNP Actன் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>தீர்வு:–</u>

12) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் 29.09.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக்கடை அருகில் எதிரி எந்தவித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் சுமார் 180 மி.லி பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாக மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 502/2024ன் கீழ் ச/பி. 4(1) (C) TNP Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13) கைப்பற்றுதல் மகசர் சாட்சியான **அ.சா.1** தனது சாட்சியத்தில், கடந்த 29.09.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது தானும், உதவி ஆய்வாளர் பிரியங்கா மற்றும் காவலர் அஜய் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக் கடை அருகே சென்றபோது ஒரு நபர் கையில் பாலித்தீன் கவருடன் உட்கார்ந்திருந்தவர் தங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை நாங்கள் வளைத்து பிடித்ததாகவும், அவர் வைத்திருந்த பாலித்தீன் பையை சோதனை செய்தபோது சுமார் 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயம் இருந்ததாகவும், மேற்படி நபரை விசாரிக்க அவருடைய பெயர் ராஜேஷ் என்றும் அவர் தெற்கு தெரு மூவலூரை சேர்ந்தவர், அவர் மேற்படி சாராயத்தை விற்பதற்கு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறியதாகவும், அவரை உதவி ஆய்வாளர் 10.05 மணிக்கு கைது செய்து, அவர் கையில் வைத்திருந்த தடயப்பொருளான் 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை கைப்பற்றுதல் மகசர் வாயிலாக தன் முன்னிலையிலும் காவலர் அஜய் முன்னிலையிலும் கைப்பற்றியதாகவும், கைப்பற்றிய

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.27 20:34:51 +0530

தடயப்பொருட்களை உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி கொட்டி அழித்ததாகவும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள கையெழுத்துகளில் முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** தன்னுடையது தான், எதிரியை உதவி ஆய்வாளர் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண். 502/2024, சட்டப்பிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், எதிரியை தக்க பிணையில் காவல் நிலைய பிணையில் விடுவித்ததாகவும், உதவி ஆய்வாளர் 29.09.2024ம் தேதியன்று விசாரணை செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14) கைப்பற்றுதல் மகசர் சாட்சியான **அ.சா.2** தனது சாட்சியத்தில், கடந்த 2024ம் ஆண்டு மயிலாடுதுறை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது 29.09.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் தானும், முதல்நிலை காவலர் மதன்குமார், உதவி ஆய்வாளர் பிரியங்கா ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு சென்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக் கடை அருகே சென்றபோது ஒரு நபர் கையில் பாலித்தீன் கவருடன் உட்கார்ந்திருந்தவர் தங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை பிடித்து சோதனை செய்தபோது சுமார் 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயம் இருந்ததாகவும், மேற்படி நபரை விசாரிக்க அவருடைய பெயர் ராஜேஷ் என்றும் அவர் தெற்கு தெரு மூவலூரைச் சேர்ந்தவர், அவர் மேற்படி சாராயத்தை விற்பதற்கு எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறியதாகவும், அவரை உதவி ஆய்வாளர் 10.05 மணிக்கு கைது செய்து, அவர் கையில் வைத்திருந்த தடயப்பொருளான 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயத்தை கைப்பற்றுதல் மகசர் வாயிலாக தன் முன்னிலையிலும் முதல் நிலைக்காவலர் மதன்குமார் முன்னிலையிலும் கைப்பற்றியதாகவும், கைப்பற்றிய தடயப்பொருட்களை உதவி ஆய்வாளரின் உத்தரவுப்படி கொட்டி அழித்ததாகவும், கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் உள்ள கையெழுத்துகளில் இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.3** மற்றும் **அ.சா.ஆ.4** தன்னுடையது தான், எதிரியை உதவி ஆய்வாளர் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண்.502/2024, சட்டப்பிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், எதிரியை தக்க பிணையில் காவல் நிலைய பிணையில் விடுவித்ததாகவும், உதவி ஆய்வாளர் 29.09.2024ம் தேதியன்று விசாரணை செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15) புலன் விசாரணை அதிகாரியான **அ.சா.3** தனது சாட்சியத்தில், கடந்த 29.09.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் தன்னுடன் இரண்டாம் நிலை காவலர் அஜய் மற்றும் முதல் நிலை காவலர் மதன்குமார் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணியில் சென்று கொண்டிருந்தபோது மயிலாடுதுறை சித்தர் காடு அரசு மதுபானக் கடை அருகே சென்றபோது எங்களை கண்டவுடன் ஒரு நபர் கையில்

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.27 20:34:58 +0530

பாலித்தீன் கவருடன் உட்கார்ந்திருந்தவர் எங்களை கண்டவுடன் ஓடினார் அவரை விசாரணை செய்தபோது அவருடைய பெயர் ராஜேஷ் த/பெ. கேசவன், தெற்கு தெரு, மூவலூர் என்று கூறினார், அவர் கையில் வைத்திருந்த பாலித்தீன் பையை பிரித்து பார்த்தபோது அதில் 180 மி.லி அளவு பிடிக்கக்கூடிய 4 பாட்டில்களில் பாண்டி சாராயம் இருந்ததாகவும், அவற்றை கைப்பற்றுதல் மகசர் வாயிலாக மேற்படி வேறு வெளி சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றியதாகவும், மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றிய 4 பாட்டில்களில் இருந்த பாண்டி சாரயத்தை அந்த இடத்திலேயே கொட்டி அழித்ததாகவும், கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5** மற்றும் அழிப்பு மகசர் **அ.சா.ஆ.6** தயார் செய்து, எதிரியை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது குற்ற எண். 502/2024, சட்டபிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7** பதிவு செய்து, எதிரியை தக்க பிணையில் எதிரியை காவல் நிலைய பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் எதிரி மீது 29.09.2024ம் தேதி சட்டப்பிரிவு 4(1) (c) TNP Actன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்.

16) இவ்வழக்கில் முக்கியமான பிரச்சனை யாதெனில் எதிரி சுமார் 180 மி. லிட்டர் பிடிக்கக்கூடிய நான்கு பாட்டில்களில் பாண்டி சாராயத்தை எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக வைத்திருந்தாரா? எதிரியிடம் இருந்து அரசு தரப்பு சாராயத்தை கைப்பற்றியதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதா? என்பதே ஆகும்.

17) அ.சா.1 தலைமை காவலர், அ.சா.2 இரண்டாம் நிலை காவலர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி உடன் ரோந்து பணிக்கு சென்று எதிரியிடமிருந்து பாண்டி சாராயத்தினை கைப்பற்றி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருந்த சாட்சிகள் ஆவார்.

18) மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் காவல் துறையை சேர்ந்த சாட்சிகள் என்பதும், அரசு தரப்பில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவோ, இவ்வழக்கின் தடயப்பொருட்கள் கைப்பற்றப்பட்டபோது உடனிருந்த நபர்கள் ஆகவோ, தனிப்பட்ட நபர்களை சாட்சியாக முன்னிலைப்படுத்தவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் காவல் துறையை சேர்ந்த சாட்சிகள் என்பதாலும், அவர்களின் சாட்சியத்தை தனிப்பட்ட சாட்சிகள் ஒத்துரைத்து சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாலேயே அவர்களின் சாட்சியத்தை மறுதலிக்க இயலாது. இருப்பினும், காவல் துறையைச் சேர்ந்த சாட்சிகளின் சாட்சியம் கோர்வையாகவும், நம்பும்படியாகவும் அமைந்துள்ளதா என்பதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:35:06 +0530

19) அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போல 29.09.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் அ.சா.1 தலைமை காவலர் திரு. மதன்குமார், இரண்டாம் நிலை காவலர் திரு. அஜய், உதவி ஆய்வாளர் செல்வி. பிரியங்கா ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானை கடை அருகே சென்றார்கள் என்பதை அரசு தரப்பில் நிரூபித்துள்ளனரா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அ.சா.1 மேற்படி தேதியில் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு மேற்படி இடத்திற்கு சென்று மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்து வரும் பணியில் ஈடுபட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி தேதியில் அ.சா.1 சாட்சி ரோந்து பணியில் இருந்தனர்? என்பதை அரசு தரப்பில் மெய்ப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் அரசு தரப்பில் முன்னிட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் வாய்மொழி சாட்சியத்தை தவிர மேற்படி மதுவிலக்கு கண்காணிப்பு பணிக்கு சென்றதாக காட்டக்கூடிய நிலைய பொது நாட்குறிப்பு ஆவணங்கள் எதுவும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மேற்படி மதுவிலக்கு கண்காணிப்பு பணிக்கு சென்றது தொடர்பாக காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளில் பதிவுகள் ஏற்படுத்தப்பட்ட விபரம் எதையும் புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மதுவிலக்கு கண்காணிப்பு பணியின் போது பதிவு செய்யப்பட்ட மற்ற வழக்குகள் பற்றிய விபரங்கள் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, மேற்படி தேதியில் ரோந்து பணி நடைபெற்றது என்பது குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளின் வாய்மொழி சாட்சியத்தை தவிர அவர்களது சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் சான்றாவணங்களை அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, மேற்படி தேதியில் மேற்படி இடத்தில் ரோந்து பணி நடைபெற்றது என்பதை தகுந்த சாட்சியங்களின் மூலம் அரசு தரப்பு நிரூபணம் செய்யப்படவில்லை என்பது புலனாகிறது.

20) இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரி கைப்பற்றப்பட்ட சாராயத்தினை முறைப்படி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளாரா என்றால் பொதுவாக மதுவிலக்கு சட்டப்படி கைப்பற்றப்படும் சாராயத்தினை எவ்வாறு அழிப்பது என்பது குறித்து தமிழ் நாடு மதுவிலக்கு சட்டம் 1937 பிரிவு 32(சி) வழிமுறைகளை வகுத்துள்ளது. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் Selvi Vs State rep by Inspector of Police, Rasipuram Police Station, Namakkal District (2011) 3 MLJ (Crl) 332 முன்தீர்ப்பு வழக்கில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படும் சாராயத்தை மதுவிலக்கு அதிகாரி அல்லது வேறு ஒரு ஆய்வாளர் ஆகிய இருவரில் யாரேனும் ஒருவர் முன்னிலையில் தான் அழிக்கப்படவேண்டும். அந்த மதுவிலக்கு அதிகாரி அல்லது ஆய்வாளர் கைப்பற்றப்பட்ட மொத்த சாராயத்தின் அளவு தடயப் பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட சாராயத்தின் அளவு மற்றும் அழிக்கப்பட்ட சாராயத்தின் மொத்த அளவு ஆகியவற்றை குறித்து ஒரு அறிக்கையை தயார் செய்து அந்த அறிக்கையை சம்மந்தப்பட்ட அதிகார வரம்புடைய குற்றவியல் நீதித்துறை நடுவரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற வழிமுறையை

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:35:12 +0530

வகுத்துள்ளது. மேலும், அ.சா.1ன் சாட்சியங்களிலும் அல்லது அரசு தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எதிலும் கைப்பற்றப்பட்ட சாராயத்தை மதுவிலக்கு அதிகாரி முன்னிலையிலோ அல்லது ஆய்வாளர் முன்னிலையிலோ அழித்து அவரிடமிருந்து அறிக்கை பெற்று அந்த அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவில்லை. இவ்வழக்கினை பொறுத்த வரையில் அரசு தரப்பு சாட்சியத்தில், சம்பவ இடத்திலேயே சாராயத்தினை கைப்பற்றி உதவி ஆய்வாளர் முன்னிலையில் அழித்து விட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், தடயப்பொருளான சாராயத்தினை கொட்டி அழித்துவிட்டு பாட்டில்களை நீதிமன்றத்தில் தடயப்பொருளாக போலிசார் தாக்கல் செய்யவில்லை. எனவே காவல் ஆய்வாளர் முன்பாக கைப்பற்றிய சாராயத்தினை அழிக்கவில்லை என்பதாலும், தடயபொருளான சாராய பாட்டிலை தாக்கல் செய்யவில்லை என்பதாலும், எதிரியிடமிருந்து சம்பவ இடத்தில் போலிசார் சாராய பாட்டில்களை கைப்பற்றினார்களா என்று சந்தேகம் எழுகின்றது. எனவே எதிரியிடமிருந்து சாராயத்தை கைப்பற்றி அழித்தார்களா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இதிலிருந்து மேற்கண்ட தமிழ் நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32(சி) மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவையும் இவ்வழக்கின் புலன் விசாரணை பின்பற்றவில்லை தெரியவருகிறது. எனவே அரசு தரப்பு எதிரியிடமிருந்து சுமார் 180 மி.லிட்டர் பிடிக்கக்கூடிய நான்கு பாட்டில்களில் பாண்டி சாராயத்தை கைப்பற்றியது குறித்தும் அழித்தது குறித்து சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

21) மேற்படி தேதியில் எதிரி 180 மி.லிட்டர் பாண்டி சாராயத்தை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று அரசு தரப்பில் நிரூபித்துள்ளனரா என்பதை பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. இவ்வழக்கில் 29.09.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை சித்தர்காடு அரசு மதுபானக்கடை அருகில் நின்று கொண்டிருந்த எதிரியை சோதனை செய்தபோது பாண்டி சாராயத்தை எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றுதல் மகசர் மூலம் 29.09.2024ம் தேதி 10.10 மணிக்கு சுமார் 180 மி.லிட்டர் பாண்டி சாராயத்தை கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சம்பவ இடத்திற்கு சிறது தூரம் தள்ளி போக்குவரத்து நடமாட்டம் இருந்த பகுதி என்று அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியமளித்துள்ளனர். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பில் தனிப்பட்ட நபர்களை கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக அழைக்காததற்கு விளக்கம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள், சம்பவ இடத்தில் மக்கள் நடமாட்டம் இருந்ததாக ஒப்புக் கொண்டுள்ள நிலையில், தனிப்பட்ட நபர்கள் முன்னிலையில் தடயப்பொருளை கைப்பற்றவில்லை. எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரியை மேற்படி சம்பவ இடத்தில் கைது செய்து பாண்டி சாராயம் கைப்பற்றியுள்ளார் என்ற சங்கதி சந்தேகத்திற்கிடமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:35:20 +0530

22) இவ்வழக்கில், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 29.09.2024ம் தேதி 10.00 மணிக்கு மேற்படி சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் மதுவிலக்கு கண்காணிப்பு பணிக்கு சென்றதாகவும், அந்த சமயத்தில் எதிரிகளிடமிருந்து பாண்டி சாராயத்தை கைப்பற்றப்பட்டதாக அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் கோர்வையாகவும், நம்பும்படியாகவும் சாட்சியம் அளிக்கவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை கோர்வையாகவும், நம்பும்படியாகவும் சாட்சியத்தை முன்னிட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை. மேற்படி அரசு தரப்பு வழக்கானது முழுவதும் சந்தேகத்திற்குட்படுவதாகவும், எதிரி மீதான குற்றச்செய்கை நம்பும்படியாக நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

23) இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Actன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டில் எதிரி குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

24) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.03.27 20:35:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

<u>அட்டவணை</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. மதன்குமார், தலைமை காவலர்

அ.சா.2 – திரு. அஜய், இரண்டாம் நிலை காவலர்

அ.சா.3 – செல்வி. பிரியங்கா, உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.09.2024 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் முதலாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 29.09.2024 | அழிப்பு மகசரில் மகசரில் உள்ள அ.சா.1ன் முதலாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 29.09.2024 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 29.09.2024 | அழிப்பு மகசரில் மகசரில் உள்ள அ.சா.2ன் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 29.09.2024 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.6 | 29.09.2024 | அழிப்பு மகசர் |
| அ.சா.ஆ.7 | 29.09.2024 | முதல் தகவல் அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை</u>

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை</u>

<u>குறிப்பு</u>

1. எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.03.27 20:35:31 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.